Registered as a Newspaper.

பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

பொதுசன நூலகம்
2 JUN
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 11 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 29 (26.06.2006) திங்கட்கிழமை இதழ் 268

# கண்காணிப்புக்குழு செயலிழந்தால் முழு அளவிலான போர் வெடிக்கும்!


## தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

கிளிநொச்சி

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளை நோர்வே இடைநிறுத்தும் நிலை ஏற்பட்டால் நெருக்கடியிலுள்ள போர்நிறுத்த உடன்பாடு முறிவடைந்து முழு அளவிலான யுத்தம் வெடிப்பதற்கே வழி கோலும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -

நோர்வே அரசாங்கத்தின் வழிநடத்தலுடனும், அனுசரணையுடனும், ஒருங்கிணைப்பின்கீழும் கண்காணிப்புக்குழு இயங்கும்போது அதற்கான ராஜதந்திர சுதந்திரத்தை (10 ஆம் பக்கம் பார்க்க)



## ஒஸ்லோவில் ஆராயும் 3 விடயங்கள்

கொழும்பு

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களை வெளியேறுமாறு புலிகள் கேட்டுள்ள நிலையில் - அதுதொடர்பாக மூன்று முக்கிய யோசனைகள் குறித்து ஒஸ்லோ மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளின் மாநாட்டில் கண்காணிப்புக் குழுவின் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நேரடியாகப் பேச புலிகளுக்கு தூது!


## மகிந்தவின் நாடகம் அம்பலம்

கொழும்பு

கருணாகுழுவின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டால், இராணுவத்தினர் மீதான தாக்குதல்களைப் புலிகளும் முற்றாக நிறுத்த முன்வருவார்களா என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு இரகசிய தூது அனுப்பிய தாக சண்டே லீடர் பத்திரிகை தகவல்

ஜனாதிபதி இரகசிய முயற்சிகள் மேற்கொண்டமை கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சண்டே லீடர் வெளியிட்டுள்ள செய்தியின்படி-துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தாக்குதல்களை முற்றுமுழுதாக நிறுத்திக் கொண்டால் விடுதலைப்புலிகளும்



## புலிகள் நிராகரிப்பு

லண்டன்

நோர்வே சமாதான அனுசரணையாளர்களை ஓரம் கட்டிவிட்டு, இலங்கை அரசாங்கத்துடன் நேரடித் தொடர்புகளைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் வைத்துக் கொள்ளாது என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் தெரிவித்தார்.


நோர்வே அனுசரணையாளர்களை விலக்கி வைத்துவிட்டு நேரடிப் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த புலிகளுக்கு இர்கசியத்தூது அனுப்பியது தொடர்பாக - பி.பி.சி யின் (10 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு

கருணாகுழுவின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டால், இராணுவத்தினர் மீதான தாக்குதல்களைப் புலிகளும் முற்றாக நிறுத்த முன்வருவார்களா என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு இரகசிய தூது அனுப்பியதாக சண்டே லீடர் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.


இரண்டு வாரங்களுக்கு பயிற்சித் திட்டமாக இதை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி இரகசிய முயற்சிகள் மேற்கொண்டமை கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சண்டே லீடர் வெளியிட்டுள்ள செய்தியின்படி-துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தாக்குதல்களை முற்றுமுழுதாக நிறுத்திக் கொண்டால் விடுதலைப்புலிகளும் இராணுவத்தினர் மீதான தாக்குதல்களை முற்றாக நிறுத்த முன்வருவார்களா என்ற (10 ஆம் பக்கம் பார்க்க)



# மகிந்தவையும் படைகளையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது

## அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு



கொழும்பு

அரசின் ஆயுதப் படைகளையும், மகிந்த ராஜபக்ஷவையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஆயுதப் படைகளின் தளகர்த்தாவாகவும், பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் பதவி வகித்தவாறு, சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்புத்துறை செயலாளராகவும் கொண்டுள்ள மகிந்த ராஜபக்ஷவை ஆயுதப்படைகளில் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பது நகைப்புக்கிடமானது.

சமாதான முன்னெடுப்புக்களில் இருந்து நோர்வேயை வெளியேற்றும் சதி நோக்கத்துடன், புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான திரைமறைவு முயற்சிகளில் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை உதயன் - சுடரொளி நாளேடுகளின் ஆசிரியர் வித்தியாதரனைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர், புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த விரும்புவதாகவும், இதற்கு மாற்றீடாக கருணா குழுவின் வன்முறைகளைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்
## இரண்டாம் சுற்று 25.06.2006

| | | | |
|---|---|---|---|
| போர்த்துக்கல் | 1 | 0 | ஹொலன்ட் |
| இங்கிலாந்து | 1 | 0 | ஈக்வடோர் |

லண்டன்

நோர்வே சமாதான அனுசரணையாளர்களை ஓரம் கட்டிவிட்டு, இலங்கை அரசாங்கத்துடன் நேரடித் தொடர்புகளைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் வைத்துக் கொள்ளாது என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் தெரிவித்தார்.

நோர்வே அனுசரணையாளர்களை விலக்கி வைத்துவிட்டு நேரடிப் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த புலிகளுக்கு இர்கசியத்தூது அனுப்பியது தொடர்பாக - பி.பி.சி யின் (10 ஆம் பக்கம் பார்க்க)

# புளொட் முக்கிய உறுப்பினர் யாழ்.நகரில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்

யாழ். நகரில் உயர் பாதுகாப்பு மிக்க பிரதேசத்தில் வைத்து புளொட் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று மதியம் 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நின்றபோதே - புளொட் உறுப்பினரான சைமன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருகோணமலை - வெள்ளை மணல் பிரதேசத்தைச் சேர்ந்த இவரது சொந்தப் பெயர் ஜெயஹூலாப்தீன் மொகமட் வாசிர் (வயது 48) ஆகும்.

இரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந் (10 ஆம் பக்கம் பார்க்க)

# புகுமுக மாணவர்கள் மீது மோசமான 'ராகிங்'வன்முறை!

யாழ்ப்பாணம்

பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் மீது யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக - குறிப்பிட்ட சில சிரேஷ்ட மாணவர்கள் 'ராகிங்' என்ற பெயரில் மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக தெரியவருகிறது.

தற்போதைய நெருக்கடியான சூழலில் புகுமுக மாணவர்கள் மீது மோசமான முறையில் சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் 'ராகிங்' செய்யப்படுவது குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.


கடந்த மூன்று நாட்களாக சிரேஷ்ட மாணவ - மாணவிகள் முதலாம் ஆண்டில் சேர இருக்கும் மாணவ - மாணவிகளை 'ராகிங்' செய்வதற்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிரேஷ்ட மாணவரின் இல்லத்துக்கே அழைத்து துன்புறுத்தி வருகின்றனர்.

நல்லூர் கோவிலடிக்கு வரும்படி ஒவ்வொரு நாளும்காலை 8 மணிக்கு புகுமுக (10 ஆம் பக்கம் பார்க்க)




# ஆர்ப்பரிக்கும் ஆர்ஜென்ரீனா



லீப்சிக்

இரண்டாவது சுற்று அல்லது ROUND OF SIXTEEN எனும் களம் திறக்கப்பட்டுவிட்டது. முதல் ஆட்டம் வீட்டுக்காரர் ஜேர்மனி எதிர் விருந்தாளி சுவீடன்.

இரண்டாவ்து ஆட்டம் தென்அமெரிக்க ஜாம்பவான்கள் எதிர் மத்திய அமெரிக்க மெக்சிக்கோ. மெக்சிக்கோ பன்னிரண்டு முறை FIFA இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றும் காலிறுதி வரையுமே முன்னேற முடிந்தது.

ஆர்ஜென்ரீனா 1978, 1986 என இரண்டுமுறை FIFA கிண்ணத்தை தமதாக்கியவர்கள். இப்பொழுது மெக்சிக்கோ களத்தில் இருந்து விலகுகிறது.

இந்த ஆட்டம் 2:1 என்று ஆர்ஜென்ரீனாவுக்கு வெற்றியாக முடிவடைந்துள்ள நிலையில் - மெக்சிக்கோ கண்ணீருடன் வெளியேறுகிறது.

முதலில் கோல் போட்டதே மெக்சிக்கோதான். ஐந்தாவது நிமிடத்தில் கிடைத்த FREE KICK வாய்ப்பை பார்டோ அடிக்க, அதனை மென்டேஸ் சிரம்மேல் தாங்கி, மார்கெய்சிடம் கொடுக்க பந்து வலைக்குள் நுழையவே, அப்பால் அங்கே மெக்சிக்கோ நாடு முழுவதுமே ஆரவாரம் எழுந்தது.

ஆனால், தனக்கென ஒரு ஒளிவட்டம் வைத்துள்ள ஆர்ஜென்ரீனா சும்மா இருக்குமா என்ன? தமது முழு வேகத்தையும் காட்டத் தொடங்கி அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் கிரெஸ்போ கோலாக்கினார்.

ஆனால், உண்மையில் உயர வந்த அந்தப்பந்து துரதிஷ்டவசமாக மெக்சிக்கோவின் பொகெட்டியின் தலையில் பட்டுத்தான் கோலாகியது என்று கருதப்படுகின்றது. (OWN GOAL)

இதன் பின்னர் நியமிக்கப்பட்ட 90 நிமிடம் வரை யாராலும் கோல் போடமுடியவில்லை. இருந்தும் 86 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் சின்னப்பெடியன் லயனல் மெஸ்ஸி அடித்த கோல் OFF SIDE வகையில் நிராகரிக்கப்பட்டது.

விலகல் முறை ஆட்டம் என்ற வகையில் முடிவொன்றைக் காண வேண்டிய நிலையில் மேலும் அரைமணி நேரம் கொடுக்கப்பட ஆர்ஜென்ரீன வீரர் சொகின் பெனால்டி பகுதிக்குள் பந்தைச் செலுத்த, ரொட்ரிக்ஸ் அடித்த அடி மெக்சிக்கோ கோல் காப்பு வீரருக்கு இடி விழுந்ததாயிற்று.

2:1 என்று எண்ணிக்கை காட்ட மெக்சிக்கோ மிகத் துயரமடைந்தது. மேலதிக அரைமணிநேர ஆட்டம் என்றதும், முதல் கோல் விழுந்ததும் ஆட்டம் நிற்கும் வெற்றி தெரியும் (GOLDEN GOAL) என்று பார்த்தால், கோல் விழுந்த பின்னும் முழு அரைமணித்தியாலமும் ஆட்டம் தொடர்ந்தது. இந்த நடைமுறை ரசிக்கக்கூடியதாக இல்லை.




கடந்த உலகக்கிண்ணத்தில் கோல்டன் கோல் முறை இருந்ததை இப்போது ஏன் SILVER GOAL முறையாக்கினார்கள் புரியவில்லை.

இந்த ஆட்டத்தின் மத்தியஸ்தர் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த மாஸிமோ புஸாகா. இவரது முகத்தில் காணப்பட்ட புன்சிரிப்பு வரவேற்கக்கூடியதாக இருந்தது.

FIFA இறுதிப்போட்டி மத்தியஸ்தருக்கும் சிரிப்பு, புன்சிரிப்பு போன்ற விடயங்கள் தெரியும் என்று இந்த ஆட்டத்தின் மூலம்தான் லட்சோபலட்சம் ரசிகர்கள் அறிந்து கொண்டார்கள்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதல்ல. அதீத திறமையே கழிதலும், அதீத திறமையே நிற்பதும் உதைபந்தாட்ட நியதி. மெக்சிக்கோ தாயகம் திரும்பலாம். ஆனால், உலகக்கிண்ணத்தை முத்தமிடமுடியாத அளவிற்குத் தகுதி குறைந்தவர்களாக அல்ல என்பது விதிகளுக்கு அப்பாற்பட்ட யதார்த்தம்.



## சுப்பர் குளோஸ்

லீக் சுற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையை ஜேர்மனியின் குளோஸ் பெறுகிறார். மூன்று போட்டிகளில் இவர் 4 கோல்களை அடித்துள்ளார்.

## அதிக கோல்

பேர்ளின்

நேற்றுமுன்தினம் வரை ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி, ஸ்பெயின் அணிகளே அதிக கோல் அடித்திருக்கின்றன. மூன்று போட்டிகளில் இந்த 3 அணிகளும் எட்டு கோல்களை அடித்துள்ளன.

லீக் சுற்றுப் போட்டியில் அதிக கோல் அடித்த முதல் அணிகள் -

| நாடு | போட்டி | கோல் |
|---|---|---|
| ஆர்ஜென்ரீனா | 4 | 10 |
| ஜேர்மனி | 4 | 10 |
| ஸ்பெயின் | 3 | 8 |
| பிறேசில் | 3 | 7 |
| ஈக்வடோர் | 3 | 5 |
| இத்தாலி | 3 | 5 |
| போர்த்துக்கல் | 3 | 5 |
| அவுஸ்ரேலியா | 3 | 5 |
| ஐவரி கோஸ்ட் | 3 | 5 |
| உக்ரெய்ன் | 3 | 5 |
| மெக்சிக்கோ | 4 | 5 |

## நேற்றுமுன்தினம் வரை அதிக கோல் அடித்தோர்

| வீரர் | நாடு | கோல் |
|---|---|---|
| மிரோஸ்லவ் குளோஸ் | ஜேர்மனி | 4 |
| பொடொஸ்கி | ஜேர்மனி | 3 |
| ரொட்றிக்ஸ் மக்ஸி | ஆர்ஜென்ரீனா | 3 |
| ஹேர்னன் கிரெஸ்போ | ஆர்ஜென்ரீனா | 3 |
| பெர்னாண்டோ ரொறெஸ் | ஸ்பெயின் | 3 |
| பார்டொஸ் பொசாக்கி | போலந்து | 2 |
| ஓமர் பிறாவோ | மெக்சிக்கோ | 2 |
| ரிம் ககில் | அவுஸ்ரேலியா | 2 |
| ஒகஸ்ரின் டெல்காடோ | ஈக்வடோர் | 2 |
| அருணா டின்டேன் | ஐவரி கோஸ்ட் | 2 |
| அலெக்ஸ்சாண்டர் பிறே | சுவிற்சர்லாந்து | 2 |
| ஸ்ரீவென் ஜெராட் | இங்கிலாந்து | 2 |
| தியறி ஹென்றி | பிரான்ஸ் | 2 |
| தோமஸ் றொசிக்கி | செக்.குடியரசு | 2 |
| அன்றி செவ்சென்கோ | உக்ரெய்ன் | 2 |
| கார்லோஸ் ரெனோறியோ | ஈக்வடோர் | 2 |

## இன்றைய ஆட்டங்கள்

இரண்டாவது சுற்று

| | | | |
|---|---|---|---|
| இத்தாலி | எதிர் | அவுஸ்ரேலியா | (மியூனிச் 08.30) |
| சுவிற்சர்லாந்து | எதிர் | இங்கிலாந்து | (லீப்சிக் 12.30) |

# அடுத்தகட்டச் சுற்றுக்குத் தயாரா?

மியூனிச்

முதல் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்து நொக் அவுட் முறையிலான ROUND OF SIXTEEN போட்டிகள் ஆரம்பமானதுமே ஒவ்வொரு போட்டியையும் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியிலேயே வெற்றிபெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றதொரு எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே தோன்றியிருந்தால் அது அவர்களின் தவறல்ல. ஆனாலும், இந்த எதிர்பார்ப்புக்கு புறநடையாக எந்தவித





அழுத்தங்களும் இன்றி சுவீடனை இலகுவாக வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது ஜேர்மனி.

தட்டுத்தடுமாறி நொக்கவுட் சுற்றுக்கு சுவீடன் தெரிவானாலும், ஜேர்மனிக்கு ஈடுகொடுத்து விளையாடும் என்ற எண்ணமே தூக்கலாக இருந்தது. ஆனாலும், 66 ஆயிரம் ரசிகர்கள் சூழ்ந்திருந்த இந்தப் போட்டியில் 4, 12 ஆவது நிமிடங்களில் பொடொஸ்கி அடித்த கோல்களானது ஜேர்மனியை முன்னிலைப்படுத்தியதோடு, சுவீடன் பற்றிய கருத்து நிலைப்பாடுகளையும் தவிடுபொடியாக்கியது.

அத்தோடு பட்டகாலிலே படும் என்பது போல ஆட்டத்தின் 35 ஆவது நிமிடத்தில் சுவீடனின் ரெடி லூசிக் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டமையும், கிடைத்த பனால்டி வாய்ப்பை தவறவிட்டமையும் போட்டியை ஒரு பக்கச்சார்பாக மாற்றிவிட்டதென்றால் அதுமிகையில்லை.

எது எப்படியோ முதல் சுற்றில் A பிரிவில் இடம் பெற்றிருந்த கோஸ்டா றிக்கா, ஈக்வடோர், போலந்து ஆகிய



அணிகள் ஜேர்மனியை ஓரங்கட்ட முடியாது இழைத்த மாபெரும் தவறு - இன்று ஜேர்மனி ஏனைய அணிகளுக்கும் சொந்த மண்ணில் யானைப் பலம் பெற்று சிம்மசொப்பனமாகத் திகழ்வதற்கு வழிசமைத்துவிட்டுள்ளதென்பதே வெளிப்படை உண்மை.

கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் எவ்வாறு சுவீடன் இரண்டாவது சுற்றில் செனகல் நாட்டிடம் 2-1 என்று தோல்வி கண்டதோ, அது போல் இம்முறையும் இரண்டாவது சுற்றில் வெளியேறுகிறது.

இதேவேளை, ஜேர்மனி இரண்டாம் கட்டத்தை நான்காவது முறையாகக் தொடர்ந்து கடந்திருக்கிறது.

கிடைத்த பெனால்டி கிக் என்ற பொன்னான சர்ந்தப்பத்தை ஹென்ரிக் லார்சன் எப்படித்தான் கோல் கம்பத்துக்கு மேலாக அடித்து நாசமாக்கினாரோ அது அவருக்கே வெளிச்சம்.

உலகக்கிண்ணப் போட்டிகள் இத்தகைய 7 சந்தர்ப்பங்களில் - 3 சந்தர்ப்பங்கள் வீணாகியிருக்கிறது. என்றாலும், உலகக் கிண்ணப்போட்டிகளில் கூடுதலாக பதின்மூன்றாவது முறை விளையாடிய பெருமை லார்சனைச் சாரும். மேலும், லார்சனின்




இறுதி FIFA ஆட்டம் என்றும் இதுவே கருதப்படுகின்றது.

மறுபுறம் காலிறுதிப் போட்டியில் ஜேர்மனி, ஆர்ஜென்ரீனாவை முப்பதாம் திகதி சந்திக்கப்போகிறது. சந்திக்கும்வேளை மலரா, முள்ளா?

# இலங்கையின் இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகாது!

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு



பெங்களூர் —

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் காண முடியாதென இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

பெங்களூரில் இடம்பெற்ற இரண்டு நாள் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் கடந்த சனிக்கிழமை பெங்களூர் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அண்டை நாடான இலங்கையில் ஏற்பட்டுள்ளது உள்நாட்டுப்பிரச்சினை. இந்தப்பிரச்சினையை பேச்சுவார்த்தை, விவாதங்கள் மூலமே இரண்டு தரப்பினரும் தீர்த்துக்கொள்வதற்கு முன்வரவேண்டும். இராணுவ பலத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. பேச்சுவார்த்தை நடைபெறும் போது இரண்டு தரப்பினரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதற்கான மனப்பக்குவம் இருக்க வேண்டும்.

இலங்கை மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, சுதந்திரம், பாதுகாப்புக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கிறது. அந்த நாட்டு மக்கள் அனைத்து வகையிலும் நிம்மதியுடன் வாழ வேண்டும். இதற்கு இந்தியாவின் முழு ஆதரவும் உண்டு. இந்த சுதந்திரத்தை அங்கு வாழும் தமிழர்களும் அனுபவிக்க வேண்டும். அவர்கள் கண்ணியத்துடனும், கௌரவத்துடனும் நடத்தப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகள் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கமாகும். அவர்களின் கோரிக்கைகள் குறித்து விவாதிப்பதற்கு நான் தயாரில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய பத்திரிகைசபை மூலம் தணிக்கை ஏற்படுத்த முயற்சி!

## சுதந்திர ஊடக இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு —

தேசிய பத்திரிகை சபையை மீளவும் ஆரம்பிப்பதன் மூலம், அரசாங்கம் பத்திரிகை தணிக்கையை ஏற்படுத்த முனைவதாக சுதந்திர ஊடக இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை கருத்துச் சுதந்திரத்தின் மீதான நேரடியான அத்துமீறல் என சுதந்திர ஊடக இயக்கத்தின் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

1973 ஆம் ஆண்டின் தேசிய பத்திரிகைசபை சட்டத்தின் கீழ் அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சரவை ஆவணங்கள், பாதுகாப்பு விடயங்கள் மற்றும் நிதி சம்பந்தமான சிலவிடயங்கள் என்பவற்றைப் பிரசுரிக்கவோ, ஒலிபரப்பவோ முடியாது.

அரசின் இந்தத் தீர்மானம் தற்சமயம் இயங்கிவரும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு ஈடான ஏற்பாடாகும். பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் 95 வீத முறைப்பாடுகளுக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டு பத்திரிகை ஆசிரியர்கள் குழாம், பத்திரிகை சமூகம் மற்றும் சுதந்திர ஊடக அமைப்பு என்பன இணைந்தே பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவை ஆரம்பித்தன.

இந்த ஆணைக்குழு சிறப்பாக இயங்கும் நிலையில் - அரசாங்கம் தமது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என சுனந்த தேசப்பிரிய கோரியுள்ளார். (01)

# அரசியல் தீர்வுத் திட்டத்துடனேயே இனி பேச்சுவார்த்தை நடைபெறும்!

## அரசாங்கம் கூடி முடிவு

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் எதிர்வரும் காலங்களில் சமாதானப் பேச்சுக்களை உறுதியான அரசியல் தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அதன் மூலம் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பான வரையறை எது என்பது குறித்து தெரிவிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு பேச்சுவார்த்தையை மேற்கொள்வதாயின் அது குறித்த காலப்பகுதிக்குள்ளேயே நிகழ்த்தப்பட வேண்டுமெனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி பேச்சுவார்த்தை நடத்தப்படுமாயின் பொதுமக்களை யுத்தத்தில் இணைத்துக் கொள்ளுதல், தாக்குதல்களை நிறுத்துதல் போன்றவற்றில் அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே தனியாக இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்படவேண்டுமெனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டின் நடவடிக்கைக்கு அமைய விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆயுதங்களைக் கீழே வைத்து சமாதானத்துக்காக அர்ப்பணிப்பு செய்ததன் பின்னர் உடனடியாக அதிகாரத்தைப் பகிர்வது ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசின் இந்தத் திட்டம் விரைவில் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கப்படவுள்ளதாக அரச தகவல்கள் தெரிவித்தன. (தே)

# சந்திரிகா– மங்கள லண்டனில் சந்திப்பு





கொழும்பு —

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் கடந்த வாரம் லண்டனில் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது

லண்டனில் நடைபெற்ற நூல் கண்காட்சியின் பின்னர் இவர்கள் இருவருக்குமிடையே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடல் லண்டனில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நடைபெற்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்தும் அவர்கள் இரு வரும் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின் முடிவில் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் இணைந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# வெடிபொருட்கள் மீட்பு!

கொழும்பு —

கல்முனை - நற்பிட்டிமுனைச் சந்தி மற்றும் பாண்டிருப்பு பொலிஸ் வீதி சோதனைச் சாவடி சந்தியிலும் 5 கிலோ எடை கொண்ட வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாகக் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட வெடிபொருட்களில் கிளைமோர் குண்டு மற்றும் 38 மீற்றர் வயர், கைக்குண்டுகள் இரண்டு , டெட்டனேட்டர்கள் என்பன அடங்கும்.

மீட்கப்பட்ட கிளைமோர் குண்டு செயலிழப்பு பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நாட்டு நிலைமை குறித்து ஐ.தே.க புதிய பிரசாரம்!

கொழும்பு —

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் ஐம்பது கூட்டங்களை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவிக்கையில் -

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு சீர்குலைவு, வாழ்க்கைச் செலவு உயர்வு, சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் ஐம்பது கருத்தரங்குகளை அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் கருத்தரங்குகள் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை நடத்தப்படும். இந்தக் கருத்தரங்குகளில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்து கொள்வர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண ஊடகவியலாளர் கொழும்பில் கைதாகி விடுதலை

கொழும்பு —

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் செய்தி ஆசிரியரான கே.குமாரதாஸ் (வயது 35) கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

மொரட்டுவவில் உள்ள பொலிஸ் காவல் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் - கல்கிசை பொலிஸ் நிலையத்தில் சுமார் 10 மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் கொழும்பு சென்றிருந்த ஊடகவியலாளர் குமாரதாஸ் - வானொன்றில் சென்று கொண்டிருந்தபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவருடன் சென்ற அனைவரும் 10 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு, நீண்ட விசாரணைகளின் பின்னரே விடுவிக்கப்பட்டனர்.

தகவல் திணைக்களம் வழங்கிய அடையாள அட்டையை ஏற்றுக் கொள்ள பொலிஸார் மறுத்துவிட்டதாகவும், தடுத்துவைக்கப்பட்டிருந்த போது தனது சட்டத்தரணி உள்ளிட்ட எவருடனும் தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்ள அனுமதிக்கவில்லை என்றும் விடுவிக்கப்பட்ட பின்னர் ஊடகவியலாளர் குமாரதாஸ் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

# வட-கிழக்கை பிரிக்கும் சட்டமூலம் அடுத்த மாதம் நாடாளுமன்றில்

## ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

கொழும்பு—

வடக்கு-கிழக்கு மாகாணங்களை உத்தியோக பூர்வமாகப் பிரிப்பது தொடர்பான சட்ட வரைபு அடுத்த மாதம் நாடாளுமன்றின் கொள்கைப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

இந்த விசேட சட்டமூலத்தை நாடாளுமன்ற கொள்கைப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது முடிவடைந்து விட்டது.

வடக்கு-கிழக்கில் வாழும் மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும், அந்த இரண்டு மாகாணங்களினதும் நிர்வாக முறையை ஒழுங்காக முன்னெடுத்துச் செல்வதற்கும் இந்த மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமென்பதற்காகவே குறித்த சட்ட வரைபு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# நீதிமன்ற கட்டடத் தொகுதியை சூழ பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

கொழும்பு —

கொழும்பு புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதியைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கையில் புதுக்கடை நீதிமன்ற வீதி ஆரம்பிக்கும் சுற்றுவட்டத்தில் இருந்து, டாம் வீதி ஆரம்பிக்கும் இடம் வரையிலான பாதைகள் மூடப்பட்டுள்ளன.

அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள சட்டத்தரணிகளின் வாகனங்களுக்கு மாத்திரமே கட்டடத் தொகுதியில் இருக்கும் வாகனத் தரிப்பிடத்துக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படுகிறது. ஏனைய வாகனங்களுக்கு அந்தப் பாதையால் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தொகுதிக்கான பாதைகளில் ஆயுதங்களுடன் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த வழியாகச் செல்லும் சந்தேகத்துக்கிடமான வாகனங்களும், நபர்களும் சோதனையிடப்பட்டு வருகின்றனர்.

அந்தப் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது.

மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நீதிமன்றத் தொகுதி அமைந்துள்ள பிரதேசத்தில் இருக்கும் மாவட்ட நீதிமன்றத்துக்கு அருகே சந்தேக நபர்கள் சிலர் ஓட்டோவில் வந்திருப்பதாகக் கிடைத்த தகவல்களையடுத்து, கடந்த வாரம் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகளுக்கு உதவி புரிந்த

# சிங்களவரை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்கு உதவி புரியும் சிங்களவர்கள் சிலரைக் கைது செய்வதற்காக இரகசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பமுனுகம கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட கடற்புலி உறுப்பினர்கள் இருவருக்கும் மேலும் சில விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் தங்குவதற்கான இட வசதிகளை வழங்கியதாகக் கூறப்படும் சிங்கள மீனவர்கள் இருவர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் இரு கைத்தொலைபேசிகளும் இரகசிய பொலிஸாரின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்த இராணுவச் சிப்பாய் வெலிஓயாவில் கைது

கொழும்பு —

வெலிஓயா - கல்யாணபுர இராணுவ முகாமுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்ததாக கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த முகாம் அதிகாரிகளால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவரைப் போன்று விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்த இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகள் என 28 பேர் இருப் பதாக அவர் தெரிவித்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து உடனடியாக செயற்பட்ட இராணுவ பொலிஸார் மேலும் 5 பேரை கைது செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். முதலில் கைது செய்யப்பட்டவர் திருகோணமலை கோமரன்கடவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், 5 மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இணைந்த இவர் சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

அவர் வெலிஓயா முன்னணி பாதுகாப்பு அரணில் பணியாற்றிய வேளை அடிக்கடி பதுங்கு குழியிலிருந்து வெளியே சென்று கைத் தொலைபேசியில் அழைப்புகளை எடுத்துள்ளார்.

இவரின் நடவடிக்கை குறித்து சந்தேகித்த அந்த முகாமைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர், அவரை அறியாமலே சில காலம் அவரைக் கண்காணித்துள்ளார். அதன்போது அந்த இராணுவச்சிப்பாய் செய்மதி தொலைபேசியொன்றிலிருந்தே அழைப்புகளை எடுத்துள்ளாரெனத் தெரியவந்துள்ளது.

செய்மதி தொலைபேசியொன்றை சாதாரண இராணுவச் சிப்பாய் பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்பதையும், அது அதிக பெறுமதி வாய்ந்தது என்பதையும் அறிந்திருந்த சார்ஜன்ட், தான் அறிந்துகொண்டவற்றை தனது உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதை அடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளில் அவர் விடுதலைப்புலிகளின் உளவாளியாக செயற்பட்டதும், விடுதலைப்புலிகளே அவருக்கு அந்த தொலைபேசியைப் பெற்றுக்கொடுத்துள்ளனர் என்பதும் தெரியவந்தது.

தன்னைப் போன்று இராணுவத்தினர், அதிகாரிகள் என மேலும் 28 பேர் இராணுவத்தில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளுக்குத் தகவல்கள் வழங்குவதாக அந்த இராணுவச் சிப்பாய் விசாரணைகளின் போது தெரிவித்தார்.

இராணுவத்தின் விசேட அதிரடிப்படை, இராணுவ கொமாண்டோப் பிரிவு மற்றும் இராணுவ பொலிஸ் துறையில் இவ்வாறு விடுதலைப் புலிகளின் உளவாளிகள் இருப்பதாக கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் கூறியிருப்பதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த இராணுவச்சிப்பாய் பாதுகாப்பு முன்னரங்கில் பணியாற்றிய சில நேரங்களில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பதுங்குகுழிக்கு வந்து அவருக்கு உணவு மற்றும் பானங்களை வழங்கியிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர் ஏனைய இராணுவத்தினருடனும், கிராமவாசிகளுடனும் சிநேகமாகப் பழகி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள், வெலிஓயா பிரதேசத்தில் எவருடனோ பழகுவதாக இதற்கு முன்னர் இராணுவத்தரப்பினருக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன.

கைது செய்யப்பட்ட பின்னர் இவரே அந்த நபர் எனத் தெரியவந்துள்ளது. இந்த சந்தேக நபர் தமிழ்ப் பெண் ஒருவரையே மணமுடித்துள்ளார். அவரின் சகோதர, சகோதரிகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

வெலிஓயாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச முன்னரங்கில் பணியாற்றுபவர் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயின் மனைவியின் சகோதரி என்று கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தேவைக்காகவே இந்த நபர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இராணுவத்தரப்பு முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். இவர் மூலம் கண்டறியப்பட்ட ஏனையவர்களுக்கும் தொடர்புகள் இருக்கக் கூடும் என்றும் அவர்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையின் மூத்த சகோதரனாக இந்தியா செயற்பட வேண்டும்

### பாலித கொகன்ன தெரிவிப்பு



கொழும்பு —

இனப்பிரச்சினை தீர்வுக்கு அயல்நாடான இந்தியா கூடுதல் பங்களிப்பை வழங்க வேண்டும் என அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார். ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இதனைத் அவர் தெரிவித்தார்.

அயல்நாடாக இருக்கும் இந்தியா- இலங்கையின் மூத்த சகோதரன் போல் செயற்படவேண்டும். விடுதலைப் புலிகளை உள்ளடக்காமல் எந்தவொரு இனப்பிரச்சினையையும் தீர்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தி எல்லையோர மக்களை காக்கவேண்டும்

### விமல் வீரவன்ச கோரிக்கை



கொழும்பு —

எல்லைக் கிராமங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்வதைத் தடுப்பதற்கு விசேட திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது.

எல்லைக் கிராமங்களென கூறப்படுவதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். எமது நாட்டின் எல்லை கடல் மட்டுமே. மாயையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவது தவறானது இந்தக் கிராமங்களை பாதுகாப்பற்ற பிரதேசம் அச்சுறுத்தலுக்குள்ளான பிரதேசம் என்றே அழைக்கப்படவேண்டும்.

இந்த அச்சுறுத்தலுக்குள்ளான கிராமங்களைப் பாதுகாக்க ஊர்காவற்படையில் பலர் சேர்க்கப்பட்டனர். ஆனால் அவர்கள் அந்தப் பகுதிகளிலுள்ள பொலிஸாரின் உதவியாளர்களாகவே செயற்படுகின்றனர்.

இந்த நிலை மாற்றப்பட்டு வட, கிழக்கு பாதுகாப்புக்கென முப்படைகளில் ஒரு அதிகாரியை நியமித்து அவரின் கீழ் ஊர்காவற்படையின் சேவையை நெறிப்படுத்த வேண்டும்.

போர் நிறுத்த உடன்படிக்கையை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இந்த உடன்படிக்கை மூலம் புலிகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதையே நாம் எதிர்க்கின்றோம்.

புலிகள் யுத்த பீதியை ஏற்படுத்தி தமது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றனர். புலிகளைத் தோற்கடிப்பதா? அல்லது நாம் தோல்வி அடைவதா? என்பதைத் தீர்மானிக்கும் சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கட்சி ரீதியான நாம் பிளவுபட்டால் அதுபுலிகளுக்கு சாதகமாக அமைந்து விடுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி

கொழும்பு —

கெப்பிற்றிக்கொல்லாவவில் பயணிகள் பஸ்மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலுக்குப் பின் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் விரும்பி அதிகமாகச் செல்லும் இடங்களான பொலநறுவ, அனுராதபுரம், திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதனால் சுற்றுலாப் பயணிகள் தாம் தங்கும் விடுதிகளின் முன் பதிவுகளை இரத்துச் செய்து வருகின்றனர்.

தற்போது 25 வீதமான பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், பெருமளவு கொலைகள் நடைபெறும் இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் எவ்வாறு வருவார்களெனவும் விடுதிகளின் முகாமையாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (01)

## பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு —

கொழும்புத் துறைமுகத்துக்கும் - கட்டுநாயக்க விமானநிலையத்துக்கும் கூடுதலான பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாவிடின் இங்கு கப்பல்கள் - விமானங்கள் வருகைக்கு அதிகளவில் காப்புறுதித் தொகை செலுத்தப்படவேண்டியிருக்கும்.

அவ்வாறெனில் அதிக காப்புறுதியைச் செலுத்தும் சிக்கலால் கப்பல்கள், விமானங்களின் வருகை குறைவடையும் என்று ஏற்றுமதி நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

துறைமுகம் தாக்கப்படுவதற்கான திட்டம் உள்ளதான தகவல்கள் வெளியாகியிருப்பது கப்பல்களின் வருகையைப் பாதிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## 4 ஆயிரத்து 742 பேர் தற்கொலை


கொழும்பு —

கடந்த ஆண்டு இலங்கையில் 4 ஆயிரத்து 742 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளமை பொலிஸ் அறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் தற்கொலை செய்து கொண்டவர்களில் 3 ஆயிரத்து 708 பேர் ஆண்கள், ஆயிரத்து 34 பேர் பெண்களாவர்.

இதேவேளை, தற்கொலை செய்து கொண்டவர்களில் அநேகமானோர் வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளாவர். இவர்களில் ஆயிரத்து 162 பேர் இளைஞர்கள், 636 பேர் யுவதிகள் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிககபபட்டுளளது.

## பத்துமணிக்கு பின்னரான தொலைக்காட்சி ஒளிபரப்புத்தடை ஜனாதிபதியின் பணிப்பில் நிறுத்தம்



கொழும்பு —

தொலைக்காட்சி ஒளிபரப்பை இரவு பத்து மணிக்குப்பின்னர் நிறுத்துமாறும் அவ்வாறு செய்யாத நிறுவனங்களிடமிருந்து மாதமொன்றுக்கு பத்து இலட்சம் ரூபா வரியாக அறவிடுவதற்கு மின்சக்தி எரிபொருள் அமைச்சு மேற்கொண்ட திட்டத்தை உடனடியாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடு ஜனநாயகத்துக்கும், ஊடக சுதந்திரத்துக்கும் தடையென்பதால் இது போன்ற நகைப்புக்கிடமான திட்டங்களை நாட்டில் முன்வைக்காமல் மின்சார சபையில் நிகழும் மின்விரயம், அழிவுகள் மற்றும் ஊழல்களை நிறுத்தி மக்களுக்கு உதவியை வழங்க வேண்டுமென ஜனாதிபதி மின்சக்தி அமைச்சுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

மக்கள் தமக்கு விருப்பமான நேரங்களில் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கான உரிமை இருக்க வேண்டும். தானும் இரவு பத்து மணிக்குப்பின்னரே தொலைக் காட்சியைப் பார்ப்பதாகவும் அலரி மாளிகையில் நடந்த கூட்டமொன்றில் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏதாவது காரணத்தால் இந்த திட்டம் செயற்படுத்தப்படுமானால் அது 1970, 1977 காலப்பகுதியில் சிறிமாவோ அரசு செயற்படுத்திய செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் சோறு உணவைத் தடை செய்ததைப் போன்ற சட்டமாகுமெனவும்,

எனவே இதனால் நிகழும் அரசியல் பிரதிபலனைக் கவனத்திலெடுத்து இரவு 10 மணியுடன் தொலைக்காட்சி ஒளிபரப்பை நிறுத்தும் ஆலோசனையை நிறுத்து மாறும் ஜனாதிபதி தெரிவித்தார். (தே)

ராஜா யாழ்ப்பாணம்



கரண் சாதனா மற்றும் பலர் நடித்த

கொக்கி

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

மனோகரா யாழ்ப்பாணம்

ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த

திருட்டு பயலே

காட்சி நேரம் 10.30,2.30,6.30.

நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், சூஷன், அப்பாஸ், விவேக் மற்றும் பலர் நடிப்பில்

வணக்கம் தலைவா

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# தேசிய இடமாற்ற கொள்கைப்படி ஆசிரிய இடமாற்றம் வழங்கவும்!

## மாகாண கல்வி அமைச்சு செயலர் பணிப்பு

யாழ்ப்பாணம் ———

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது தேசிய இடமாற்றக் கொள்கையைப் பின்பற்றி அதனடிப்படையில் செயற்படுமாறு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

பெரும்பாலான கல்வி வலயங்களில் வருடம் முழுவதும் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பாடசாலைகளின் நிர்வாக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் மாகாண கல்வியமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

எனவே, ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வருட இறுதிப் பகுதியில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அடுத்த கல்வியாண்டில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் எந்தவித இடமாற்றங்களும் மேற்கொள்ளப்படக் கூடாதெனவும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட காலங்களுக்கு ஒரு ஆசிரியர் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் அல்லது வசதியான பாடசாலைகளில் கடமையாற்றுவதைத் தவிர்க்கும் வகையிலும் சகல பாடசாலைகளுக்கும் சமமான ஆசிரியர் வளத்தைப் பகிர்ந்தளிக்கும் நோக்கத்துடனும் இடமாற்றங்களால் மாணவர்களும் ஆசிரியர்களும் நன்மையடையும் விதத்திலும் இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

# சண்டிலிப்பாய் பகுதியில் வீடு வீடாகத் தேடுதல்!

வலிகாமம் ———

சண்டிலிப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினரின் சுற்றி வளைப்பு தேடுதல் இடம் பெற்றது. நேற்று முன்தினம் அதி காலை 5 மணியளவில் இந்தச் சுற்றி வளைப்பை படையினர் மேற்கொண் டனர்.

இதன் போது இராணுவத்தினரும்,பொலிஸாரும் இணைந்து வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்களுடன் கறுப்புத் துணியால் முகம் மறைக்கப்பட்ட சிலர் வீடுகளில் இருந்தோரின் அடையாள அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகளை பரிசோதித்ததுடன் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தினர்.

# சங்கீத, நடனபாட செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம் ———

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் படிப்புகள் பரீட்சை அலகின் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் ஜூலை மாதம் 3 ஆம் திகதி மருதனார் மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கட்டடத்தில் நடத்துவதற்கான ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தமது பரீட்சைக்கான அனுமதியட்டைகளுடன் சமூகமளிப்பதுடன்,செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் படிப்புகள் பரீட்சை அலகுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு வெளிவாரி பட்டப் படிப்புகள் பரீட்சை அலகுடன் தொடர்பு கொள்ளலா மெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்!

யாழ்ப்பாணம் ———

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பகுதி-நேரமாகக் கடமையாற்றி வரும் ஆங்கில ஆசிரியர்களில் 225 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அனுமதியை கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்துக்கு கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதியில் 180 நாட்கள் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் 225 பேருக்கு இந்த நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம்,வட-கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 25 வைத்திய நிலையங்களில் அவசர அலகு பிரிவு அமைப்பு

யாழ்ப்பாணம் ———

பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிமனையின் கீழ் யாழ். மாவட்டத்தில் 25 மருத்துவ நிலையங்களில் அவசர அலகு பிரிவு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவசர நோயாளி ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் பட்சத்தில் அவரை உடனடியாக பரிசோதிக்க வசதிகள் செய்து வைக்கப்பட்டிருக்கும். அங்கு மேற்கொள்ளப்படும் உடனடி சிகிச்சை வெற்றியளிக்கும் பட்சத்தில் அவர் வீட்டுக்கு அனுப்பப்படுவார்.

மேலதிக சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்படின் அங்கு நோயாளிக்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டு, தொலைபேசி மூலம் அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு பிரதான வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதார நடைமுறைகளைப் பேண மாநகரசபை துரித நடவடிக்கை!

யாழ்ப்பாணம் ———

யாழ். நகரஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றாடல் சுகாதார நடைமுறை களைப் பேணும் வகையில் யாழ். மாநகரசபை துரித நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

மாநகர வீதிகளில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் நிறையும் குப்பைகள் சுழற்சிமுறையில் மாநகரசபை உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் வீதிகளில் குப்பை கூழங்களை அகற்றுவதை துரிதப் படுத்தும் வகையில் மேலதிகமாக வீதிகளில் குப்பைத் தொட்டிகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள தொண்டர்கள் மூலம் குப்பை கூழங்களை அகற்றுவது தொடர்பாக வீடுகளில் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பேக்கரிகளில் சுகாதாரம் பேணப்படுவதைக் கண்டறிய மாநகசபை திடீர் பரிசோதனைகளை அண்மையில் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபான விற்பனை நிலையங்களால் பாடசாலை மாணவர் பெரும் சிரமம்!

பண்டத்தரிப்பு ———

வலி.மேற்கு சுழிபுரம் பகுதியில் அமைந்துள்ள இரு மதுபான விற்பனை நிலையங்களால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படைவதாக பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

வலி.மேற்கு சுழிபுரம் பகுதியில் அமைந்துள்ள பிரபல்யமான பாடசாலைக்கு மிகவும் அண்மையில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையம் - பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்துள்ளதால் பாடசாலைக்கு செல்லும் மாணவ, மாணவியர் பல்வேறு வழிகளிலும் சிர மங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தவிர பாடசாலைக்கு அண்மையில் மறுபுறம் புதிதாக நிறுவப்பட்டு வரும் கள்ளுத் தவறணை இன்னமும் திறக்கப்படாத போதிலும் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இவ் வாறு பாடசாலையின் இருபுறமும் மதுபான விற்பனை நிலையங்கள் அமைவதால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் அவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிப்படையுமென பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இவ்வாறு மதுபான விற்பனை நிலையங்களை அமை க்க வலைய அதிகாரிகள் எந்த வகை யில் அனுமதி வழங்கியுள்ளனர் எனக் கேள்வி எழுப்பும் பெற்றோர் கள் - பாடசாலை மாணவர்கள் பாதிப் படைவார்கள் என்பது அவர்களின் கண்களுக்கு தெரியவில்லையா? அல்லது வேறு ஏதாவது வழிகள் மூலம் இந்த அனுமதி வழங்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பியுள்ள னர்.

இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு மாணவர்கள் கல்வி பாதிப் படையாமல் வளர்ந்து வரும் இளைய தலைமுறையில் அக்கறை செலுத்தி தகுந்த நடவடிக்கையை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (43)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : ரிஷிகரன்
முகவரி : உடுப்பிட்டி.

### அகவை ஒன்று



பெயர் : த.காவேரி
முகவரி : வல்வெட்டித்துறை.

### அகவை ஒன்பது



பெயர் : ந.திவ்வியபாரதி
முகவரி : உழவனூர்.




# கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் ஒத்திவைப்பு

நெடுந்தீவு ———

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தால் நாளையும் நாளை மறுதினமும் நடத்தப்படவிருந்த கனிஷ்ட மாணவர் மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மைதானத்திலேயே இடம் பெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோதும் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இதேவேளை இந்தப் போட்டிகள் இடம்பெறுவது மற்றும் ஏனைய போட்டி தொடர்பான விபரங்களுக்கு யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவரின் தொலைபேசி இலக்கம் 0776 569 382 உடனோ அல்லது செயலாளரின் இலக்கம் 07774 26 924 உடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (113)

# சாவகச்சேரி - பருத்தித்துறை பஸ் சேவையில் நேர மாற்றம்

யாழ்ப்பாணம் ———

அரசின் புதிய நேரமாற்றத்தை அடுத்து அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் நலன் கருதி பருத்தித்துறை - சாவகச்சேரி நகரங்களிடையேயான போக்குவரத்துச் சேவையில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சரசாலையூடாக சாவகச்சேரிக்குச் செல்லும் பஸ்கள் பருத்தித்துறையிலிருந்து காலை 6.20 மணிக்கும், 9.25 மணிக்கும், நண்பகல் 1.05 மணிக்கும், பி.ப.4 மணிக்கும் சாவகச்சேரிக்குப் புறப்படும். சாவகச்சேரியிலிருந்து காலை 7.55 மணிக்கும், 10.40 மணிக்கும், பிற்பகல் 2.35 மணிக்கும், பிற்பகல் 5.40 மணிக்கும் பஸ்கள் சரசாலையூடாக பருத்தித்துறைக்குப் புறப்பட்டுச் செல்லும்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரங்கள் மாற்றப்பட்டதையடுத்து போக்குவரத்துச் சபை பஸ்களின் சேவை நேரங்கள் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

# சாவகச்சேரியில் 11 பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு வகுப்புகள் புனரமைப்பு

சாவகச்சேரி ———

சாவகச்சேரி கல்வி வலயத்துக்கு உட்பட்ட 11 பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகள் "யுனிசெப்" அனுசரணையுடன் புனரமைக்கப்படவுள்ளதாக வலயக் கல்வி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதடி, நுணாவில், அ.த.க.பாடசாலை, கச்சாய் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், குடமியன் அ.த.க.பாடசாலை, வெள்ளாம்போக்கட்டி றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை, கைதடி குருசாமி வித்தியாலயம், இயற்றாலை அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உள்ள ஆரம்பப் பிரிவு வகுப்பறைகளே நவீன முறையில் புனரமைக்கப்படும்.

இதேவேளை சாவகச்சேரி கல்வி வலயத்தில் 51 ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2:II இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பதவி உயர்வுக் கடிதங்கள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வலயக் கல்வி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# "வாழுங்கணங்கள்" ஒளிப்படத்தொகுதி கிளிநொச்சியில் வெளியீட்டு நிகழ்வு!

கிளிநொச்சி—

ச.அமரதாசின் "வாழுங்கணங்கள்" ஒளிப்படத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நுண்கலைக் கல்லூரிகளின் பணிப்பாளர் தணிகைமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அதிபர் தி.இராசநாயகம் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். தொடர்ந்து மாவீரரின் பொதுப்படத்துக்கான சுடரை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றினார்.


பொதுப்படத்துக்கான மலர்மாலையை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா அணிவித்தார். ஒளிப்படத் தொகுதிக்கான வெளியீட்டுரையை தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

ஒளிப்படத் தொகுதியின் முதல் பிரதியை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டு வைக்க, தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை புதுவை இரத்தினதுரை நா.தமிழன்பன், மூத்த போராளி யோகரட்ணம் யோகி, சோ.தங்கன், மூத்த அரசறிவியலாளர் மு.திருநாவுக்கரசு உட்பட்டோர் வழங்கினர்.

சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

ஆய்வுரையை ஆய்வாளர் நிலாந்தன் நிகழ்த்தினார். ஒளிப்படம் பற்றிய கருத்துரையை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நிகழ்த்தினார். ஏற்புரையை ஆசிரியர் அமரதாஸ் நிகழ்த்தினார்.





தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் செந்தூரன் செந்தமிழ் முன்பள்ளி திறனாய்வுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, சிறார்களின் விளையாட்டுக்களைப் படத்தில் காணலாம்.

# மக்கள் கட்டுமான அடிப்படை பயிற்சி

வட்டக்கச்சி—

சக்திபுரம் சுரேஷ் மக்கள் கட்டுமானப் படை பயிற்சி பாசறை நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு சக்திபுரம் யமுனை முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பக் கட்டப் பயிற்சிகளை நிறைவுசெய்த நூற்றுக்கும் அதிகமான மக்கள் சக்திபுரம் சந்தியில் இருந்து அணி நடையாக யமுனை முன்பள்ளி மைதானத்தை வந்தடைந்தனர். அங்கு சிறிதேவன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் - பொதுச் சுடரை தமிழீழ நுண்கலைப் பிரிவுப் பொறுப்பாளர் தணிகைமாறன், உருத்திரபுரீஸ்வரன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவசுப்பிரகாசம், செயலாளர் கந்தசாமி ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியை இளையோர் மேம்பாட்டு அமைப்புப் பொறுப்பாளர் நரேன் ஏற்றினார்.

மாவீரர் சுரேஸின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை உருத்திரபுரம் வடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் இசைப்பிரியன் ஏற்றினார். மலர் மாலையை மாவீரர் சுரேஸின் தந்தையார் அணிவித்தார்.

சிறப்புரையை தமிழீழ நுண்கலைப் பிரிவுப் பொறுப்பாளர் தணிகைமாறன் நிகழ்த்தினார். தொடர்ந்து ஆரம்பக் கட்டப் பயிற்சிகளை முடித்தவர்களுக்கான பயிற்சி அட்டைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (09)

# பொங்கல் விழா

வட்டக்கச்சி—

புதூர் நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் விழாவை முன்னிட்டு செல்வாநகர் சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் பொங்கல் விழா இன்று இடம் பெறவுள்ளது.

இன்று மாலை 5 மணிக்கு பொங்கல் விழாவும், இரவு 9 மணிக்கு பூசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (09)

## ஜேர்மனியில் வசிப்போர்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு உதவி

கிளிநொச்சி—

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தற்போது ஜேர்மனியில் வசித்து வரும் முல்லைத்தீவு மக்கள் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக மணலாறு கொக்கிளாயைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியில் தற்போது வசித்து வருபவருமான குழந்தை என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலைகளுக்கான உபகரணங்களை வழங்கினார்.

இதன்படி விசுவமடு மகாவித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கணினித் தொகுதிகளும், தேவிபுரம் அ.த.க பாடசாலைக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினித் தொகுதியும், முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கியும், கொக்கிளாய் அ.த.க பாடசாலைக்கு 89 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கியுமென மொத்தம் மூன்று லட்சத்து 79 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் இவரால் வழங்கப்பட்டன. (கு)

# வவுனியா பஸ்நிலைய குழந்தை; திருமலை தம்பதிகள் தத்தெடுப்பு

வவுனியா—

வவுனியா பஸ் நிலையத்தில் கைவிடப்பட்டிருந்த பெண் குழந்தையைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு திருகோணமலையைச் சேர்ந்த தம்பதியினருக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட இந்தக் குழந்தைக்கு எவரும் உரிமை கோராததால் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் வளர்ந்து வந்தது.

இதனை அறிந்த பிள்ளைகள் இல்லாத இரு தம்பதியினர் தாம் இந்தக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க விரும்புவதாக வவுனியா நீதிமன்றத்தின் அனுமதி கேட்டு, மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை பரிசீலித்த வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் இந்தக் குழந்தையின் எதிர்காலம், கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களை ஆராய்ந்த பின்னர் திருகோணமலையைச் சேர்ந்த தம்பதியினர் குழந்தையை தத்தெடுத்து வளர்க்க அனுமதி வழங்கியிருந்தார்.

இதனையடுத்து வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இந்தப் பெண் குழந்தை நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டு, குறிப்பிட்ட தம்பதியினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவர்கள் தத்தெடுக்கும் உரிமை கோரி மனுத்தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

# உழவனூர், தர்மபுரம் பகுதிகளில் நல்லின மாடுகள் விநியோகம் !

கிளிநொச்சி—

ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பசுமைப் புரட்சிக்கான நிறுவனத்தால் - உழவனூர், தர்மபுரம் மேற்கு கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட இருபது பயனாளிகளுக்கு நல்லின பால் மாடுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு உழவனூர் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் நா.காசிநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் மு.செந்தில் ஏற்றினார்.

இந்த நிகழ்வு கண்டாவளைப் பிரதேச கால்நடை வைத்தியர், காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தல் இணைப் பாளர், தர்மபுரம் மேற்கு கமக்கார அமைப்புத் தலைவர் ஆகியோரால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கால்நடை வைத்தியர், காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தல் திட்ட இணைப்பாளர், பசுமைப் புரட்சிக்கான நிறுவன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களால் பயனாளிகளுக்கான கால்நடைகள் வழங்கப்பட்டன. (கு)

# கொடிவாரம் அனுஷ்டிப்பு!

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டுக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான சகல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மேம்பாட்டு பேரவையினர் மேற்கொண்டு வருகின்றனர். (09)

# கலந்துரையாடல்

கிளிநொச்சி—

கரும்புலிகள் நாள் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் சமாச தலைவர் மரியராசா தலைமையில், சமாச கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்புலிகளின் முல்லைத்தீவு நகர தளபதி தினேஸ், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், சமாச மேலாளர் மோகன், முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட சமாசத்தின் பணிப்பாளர் சபையினர், அங்கத்துவ சங்கங்கள் என அனைத்தும் கலந்து கொண்டன. (கு)

# விசுவமடுவில் சிறப்புற நடைபெற்ற மாதாந்த முத்தமிழ் கலையரங்கம்

கிளிநொச்சி—

புலிகளின் குரல் முத்தமிழ் கலையரங்கம் விசுவமடுவில் நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 7.30 மணிக்கு விசுவமடு மைதானத்தில் விசுவமடு வானொலி மன்றத்தலைவர் மு.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை விசுவமடு பிரதேச சிறப்பு வேலைத் திட்டப் பொறுப்பாளர் நர்மதன் ஏற்றினார். ஈகச்சுடரை லெப்டினன்ட் கௌதமனின் தந்தை வெ.செல்வராசா ஏற்றினார். மாவீரர் நினைவாலயத்துக்கு கிளிநொச்சி மாவீரர் போராளிகள், குடும்ப நலக்காப்பகப் பொறுப்பாளர் குபேரன் மலர்மாலை அணிவித்தார்.

வரவேற்பு நடனம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, வரவேற்புரையை விசுவமடு வானொலிமன்றத்தின் உறுப்பினர் ஞானம் நிகழ்த்தினார். தமிழீழ வைப்பக உரையை பதில் தகுதிநிலை அலுவலர் அ.யுதான் நிகழ்த்தினார்.

சிறப்புரையை தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா நிகழ்த்தினார். இதில் விசுவமடு மகாவித்தியாலய மாணவர்களின் நாடகம், விசுவமடு மாணவிகளின் கும்மி, கோலாட்டம், "உனது ஊர் போச்சு" என்ற தலைப்பிலான ஆசிரியர்கள், மாணவர்களின் கவியரங்கம், காசி மணியத்தின் தனி நடிப்பு, விசுவமடு இளைஞர் மன்றத்தின் விளிம்பில் நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் இங்கு அரங்கேற்றப்பட்டன.

சிறப்பு நிகழ்ச்சியாக சங்கநாதம் அரங்கேற்றப்பட்டது. நிகழ்ச்சிகளில் பங்காற்றிய கலைஞர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் மற்றும் அரசண்ணா, நர்மதன், கொள்கை முன் னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த சசி, மகளிர் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் பொன்மணி, புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் வழங்கினர். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
குற்ற மிலானாய் குடிசெய்து வாழ்வானை
சுற்றமாய் சுற்றும் உலகு.
- திருக்குறள்

## நமது நோக்கு

# அராஜகத்தின் உச்சம்!

பல்கலைக்கழக வளாகத்துக்குள் நேற்று முன்தினம் இராணுவத்தினர் அத்துமீறிப் பிரவேசித்த சம்பவம் - மீண்டும் பல்கலைக்கழகச் சூழலில் கொந்தளிப்பான நிலையை உருவாக்கிவிடும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பல்கலைக்கழக வளாகங்களுக்குள் ஆயுதம் தாங்கிய படையினர் பிரவேசிப்பதற்கு இலங்கையின் கல்விசார் சட்டங்கள் இடமளிக்கவில்லை. ஆனால், அரச படையினர் அதைப் பொருட்படுத்தும் நிலையில் இல்லை என்பது - நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

ஏற்கனவே கடந்த டிசம்பர் மாதம் பல்கலைக்கழக சமூகம் மீது பரமேஸ்வரா சந்தியில் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் மற்றும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்து பொலிஸார் நடத்திய தாக்குதல் ஆகியன மாணவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதன் விளைவாக பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலை உருவானதுடன், பாதுகாப்பற்ற சூழல் இருந்ததால் - நீண்டகாலமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பித்துப் போயிருந்தன.

இப்படிப்பட்ட நிலையிலே நேற்று முன்தினம் பல்கலைக்கழக வளாகத்துக்குள் படையினர் அத்துமீறி நுழைந்தமை மீண்டும் மாணவர்கள் மத்தியில் சினத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரச படையினர் மாணவர்களைச் சீண்டிவிட்டு கல்வி நடவடிக்கைகளை எப்படிக் குழப்பலாம் என்று காத்திருக்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் குடாநாட்டுக்கு படையினரால் கூட்டிவரப்பட்ட ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட 51 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் மார்க் - புலிகள் பல்கலைக்கழகம், வைத்தியசாலை போன்றவற்றுள் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகக் கூறியிருந்தார். இவரது இந்தக் கருத்து வைத்தியசாலை மீதும், பல்கலைக்கழகம் மீதும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஒரு முன்னோட்டமாகவே பார்க்கப்படுகிறது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும், நோயாளர்களின் பிணி தீர்க்கும் வைத்தியசாலையையும் குழப்பும் வகையிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமோ என்ற பயம் குடாநாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகத்துக்குள் படையினரின் அத்துமீறல் என்பது எந்த வகையிலும் அனுமதிக்கப்படமுடியாதென்பதுடன் - எந்தக் காரணமோ, உரிய அனுமதியோ இன்றி நுழைந்தது நிச்சயம் உள்நோக்கத்துடனேயே என்பதில் சந்தேகம் இல்லை.

மாணவர்கள் மத்தியில் உணர்வுபூர்வமான பிரச்சினைகளைத் தூண்டிவிடும் வகையிலேயே இந்த அத்துமீறல் இடம்பெற்றிருக்கிறது.

தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாக நேசிக்கப்படும் - பூசிக்கப்படும் மாவீரர்களின் கல்லறைகள் அமைந்துள்ள துயிலுமில்லத்திலும் நடத்தப்பட்டிருக்கும் தாக்குதல்கூட பிரச்சினையைத் தூண்டிவிடும் செயலே.


மக்கள் மத்தியில் உணர்வுபூர்வமான பிரச்சினைகளைக் கிளப்பி குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே படைத்தரப்பின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இந்த வகையில் மீண்டும் பணிப்புறக்கணிப்பு, போராட்டம் என்று கொந்தளிப்பான ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கான முழுப் பொறுப்பும் அரச படைத்தரப்பையே சாரும்.

சமாதானத்தின் மீது நம்பிக்கையும், அர்ப்பணிப்பையும் அரசு கொண்டிருப்பதை நிரூபிக்க வேண்டுமானால் இத்தகைய அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# முக்கிய இடங்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க ஜனாதிபதி அறிவுறுத்து



கொழும்பு —


வரலாற்றுத் தலங்கள், மத்திய மலையக நீர்த் தேக்கங்கள் மற்றும் பாதுகாப்பற்ற பிரதேசங்களின் கிராமங்களுக்கு விசேட பாதுகாப்புகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன் படி அனுராதபுரம் ஜயசிறி மகாபோதி உட்பட அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் மற்றும் கண்டி தலதா மாளிகையின் பாதுகாப்பையும் பலப்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், கெப்பிற்றிக்கொல்லாவ உட்பட்ட கிராமத்தைச் சூழவுள்ள அனைத்துப் பகுதிகளையும் இணைத்த பெருந்தெரு ஒன்றை அமைத்து, அந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் எந்தவொரு யுத்த ரீதியான நடவடிக்கைக்கும் முகம் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# சிங்கள மாணவர்கள் வெளியேற்றம் ஜாதிக ஹெல உறுமய கடும் கண்டனம்



கொழும்பு —

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து சிங்கள மாணவர்களை விலக்குவதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற் கொண்டுள்ள தீர்மானத்தை ஜாதிக ஹெல உறுமய கடுமையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளதாவது -

சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்புடன் கூடிய கல்வியை வழங்குவதற்கு பொருத்தமான சூழலை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. எனவே இந்தப் பல்கலைக்கழகங்களில் கல்வியைப் பயிலும் சிங்கள மாணவர்களுக்குப் பாதுகாப்பை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாணவர் சங்கத்தால் சிங்கள மாணவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் இந்த அச்சுறுத்தல்களுக்குப் பயந்து வட-கிழக்கு பல்கலைக்கழகங்களைத் தமிழ் மாணவர்கள் மட்டும் உள்ள பல்கலைக்கழகங்களாகச் செயற்பட அனுமதிக்கக் கூடாது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாணவர் சங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசும், கல்வியமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களிலிருந்து சிங்கள மாணவர்களை வெளியேற்றுவதே விடுதலைப் புலிகளின் நோக்கமாகும். எனவே அந்த நோக்கத்தை நிறைவேற்ற அரசாங்கம் இடமளிக்கக் கூடாதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# தமிழ்த் தினப் போட்டியை 19 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

விபுலானந்த அடிகளாரின் நினைவு தினமான ஜீலை 19 ஆம் திகதி வலய மட்டத்திலான தமிழ் மொழித் தின போட்டிகளையும் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வையும் நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கோரியுள்ளது.

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டி சம்பந்தமான சுற்று நிருபம் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தினப் போட்டிகள் பாடசாலை மட்டம், தேசிய மட்டம் ஆகிய நிலைகளிலேயே நடத்தப்படும். பாடசாலைத் தொகை அதிகமாக காணப்பட்டால் வலயத்துக்குள் கோட்ட ரீதியாகவும், மாகாணத்துக்குள் மாவட்ட ரீதியாகவும் போட்டிகளை சம்பந்தப்பட்டவர்களின் அனுமதி பெற்று நடத்தப்பட வேண்டும்.

அனைத்துப் போட்டிகளும் பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பும், வலய மட்டத்தில் ஜீலை 19 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டத்தில் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நிலைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களால் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

மாகாணமட்ட, தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம்,மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு உயர் கல்விக்கான சந்தர்ப்பங்களில் சலுகைகளைப் பெற வாய்ப்புண்டு. எனவே போட்டிகள் அனைத்தையும் சுற்று நிருபத்துக்கமைய நடத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எமது கனவு மரண பயமற்ற தமிழீழமே!

அமைதிக்கான கனவுகளைக் கழுவில் ஏற்றி விட்டு மறுபடி ஆரம்பித்துவிட்டது ஆயுதங்களின் கோரத்தாண்டவம். குழந்தைகளின் கண்முன்னே தாய்மார்கள்



பாலியல் வன் முறை செய்யப்படும் பெரும் துயரம். பிறப்புறுப்பில் வெடி வைத்துக் கொல்லப் படும் குரூரம். எப்போது ஷெல் வந்து விழுமோ எனபது பதுங்கு குழிகளில் பயந்து தவிக்கிற அவலம். யுத்தத்தின் கொடூர மான இருட்டு ஈழத்தைச் சூழ்ந்திருக்கிறது.

ஒரு பக்கம் சிங்கள இராணுவம் வெறித் தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட, புலிகளும் இன்னொரு "ஓயாத அலை" களுக்கு ஆக்ரோஷமாகத் தயாராகிறார்கள். இந்த நெருக் கடியான நிலையில், கிளிநொச்சியில் இருக்கும் விடுதலைப் புலிகளின் தலைமை அலுவலகத்தில் ஆலோசனையில் இருந்த புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த



பேட்டியிலிருந்து -

***"நான்காண்டு கால அமைதி முயற்சிகள் குலைந்து மீண்டும் யுத்த சூழல் உருவாக யார் காரணம்?"***

"சிங்கள அரசாங்கமும், சிங்கள இனவாதி களுமே காரணம். 2002 இல் ஈழத்தை ஆக்கிரமித்திருந்த சிங்கள இராணுவத்தை முறியடித்து பல இராணுவ வெற்றிகளைப் புலிகள் ஈட்டிய போது, இலங்கை அரசு அடிபணிந்து பேச்சுவார்த்தைக்கு வந்தது. நோர்வேயின் அனுச ரணையோடும் சர்வதேச சமூகத்தின் ஆதரவோடும் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டு உருவாக்கப்பட்ட விஷயம் தான் போர் நிறுத்த உடன்படிக்கை.

அப்படி இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களை இலங்கை அரசாங்கம் நிறை வேற்றத் தவறியதுதான் இப்போது உருவாகியிருக்கும் வன்முறைச் சூழலுக்குக் காரணம். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக எமது மக்கள் கொன்று அழிக்கப்பட்டும், சொந்த நிலத் திலிருந்து விரட்டி அகதிகளாக்கப்பட்ட அவல நிலையிலும் இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் சொந்த நிலங்களில் குடியமர்த்தி, அங்கிருந்து இராணுவத்தை விலக்க வேண்டும் என்பது பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதை இன்றுவரை இலங்கை அரசு செய்யவில்லை. இன்னொன்று, துணைக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது. ஆயுதங்களைக் களைவதற்குப் பதி லாக, அவர்களுக்கு இன்னும் இன்னும் புதிய ஆயு தங்களைக் கொடுத்து, தமிழர் பகுதிகளில் வன் முறையை ஏவிவிடுகிறது அரசு. இந்த மாதிரி நம்பிக்கைத் துரோகங்கள் தான் இன்றைய வன் முறைச் சூழலுக்கு மிக முக்கிய காரணம்."

***"அநுராதபுரத்தில், பேருந்தில் சென்ற 64 பேர் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறிய தற்குப் புலிகள் தான் காரணம் என்று இலங்கை அரசு குற்றம் சுமத்தியிருக்கிறதே?"***

"சிங்கள இனவாதிகள் தமிழர்களுக்கு மட்டு மல்ல, சிங்கள மக்களுக்குமே எதிரானவர்கள். எங்களுடைய சொந்த அமைப்போ, எமது தலைமைப் பீடமோ ஒருபோதும் அனுமதிக்காது. புரிந்துகொள் ளுங்கள்... நாங்கள் எந்த நாட்டுக்கும், இனத்துக்கும் எதிரானவர்கள் அல்ல. எமது சொந்தத் தாயகத்தில் பூர்வீகமாக வாழ்ந்த மண்ணில், சகல உரிமைகளையும் பெற்றுப் பிற தேசங்களில் மக்கள் எப்படி வாழ்கி றார்களோ அப்படி ஒரு வாழ்வை உறுதி செய் யவே போராடுகிறோம்.

அமெரிக்கா உட்பட அது எந்த நாடாக இருந் தாலும் சரி, தமிழர்களின் வாழ்வுரிமைப் போரா ட்டத்தைப் புரிந்து, ஏற்றுக்கொண்டு அங்கீகரிப் பதுதான் பொருத்த மாக இருக் கும். மற்றபடி, இதில் தலையீடு செய்து பலவீனப்படுத்த முனைவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை."

**டி. அருள் எழிலன்**

***"ஐரோப்பிய யூனியனும் இப்போது விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக அறிவித்து தடைசெய்திருக்கிறார்களே! இதை எப்படி எதிர்கொள்ளப்போகிறீர்கள்?"***

"இலங்கை அரசாங்கம் தனது ராஜதந்திர அழுத்தங்களையும், பொய்யான பிரசாரங்க ளையும் பயன்படுத்தித் தவறான வழியில் ஐரோப்பிய ஜூனியனையும் இன்னும் பல நாடுகளையும் இப்படியான அறிவிப்பைச் செய்யத் தூண்டியிருக்கிறார்கள். இது தவறானது. ஒரு தலைப்பட்சமானது. இந்த அநீதியான தீர்ப்புகளுக்கும், தடைகளுக்கும் எதிராக அந்தந்த நாடுகளில் வாழும் ஈழ மக்கள் தங்கள் குரல்களை எழுப்பி, உணர்வுகளை வெளிப் படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நாடுகள் வெகுவிரை வில் உண்மையை அறிந்து கொண்டு, தங்களுடைய நிலைப் பாடுகளில் மாற்றங் களைக் கொண்டு வரும் என நம்புகிறேன்".

***"இந்தியாவிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?"***

"இந்தியா உட்பட எல்லா நாடுகளும் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பதே எமது மக்களுடைய விருப்பமும், எமது விருப்பமும் ஆகும். இந்தியாவைப் பொறுத்த வரை, தனது அயல் நாடொன்றில் இனப்படுகொலைகள் நடக்கிற போது, பாதிக்கப்படும் இனத்துக்குத் தார்மீக ஆதரவைக் கொடுத்திருக்கிறது. பலஸ்தீனப் போராட்டத்தை ஆதரித்ததைப் போல, நேபாளத்தின் மன்னராட்சிக்கு எதிராக நடந்த ஜனநாயகக் கிளர்ச்சியை ஆதரித்த தைப் போல எமது மக்களின் தார்மீகப் போராட் டத்தையும், அபி லாஷைகளையும் புரிந்து கொண்டு இந்தியா தனது ஆதரவை வெளிப் படுத்த வேண்டும் என்பது தான் எமது விருப்பம்."



***"தற்போது ஏற்பட்டுள்ள சூழலில் தொடர்ந்து பேச்சுவார்த்தை யில் பங்கு பெறுவீர்களா, அல்லது யுத்தம் தானா?"***

"போர் நிறுத்த உடன்பாடு தற்போது கேள்விக்குறியான நிலையில்தான் உள்ளது. எம்மைப் பொறுத்தவரையில், நாங்கள் இந்த உடன்பாட்டை முறித்துக்கொண்டு யுத்தத்துக் குச் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும், சிங்கள அரசு இப்போது எங்கள் மக்கள் மீது பெரியதொரு இனப்படுகொலையையும், வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. புலிகளின் முக்கிய தளங்களையும், மக்களின் குடியிருப்புகளையும் சிங்கள இராணுவம் தொடர்ந்து தாக்க முயற்சித்து வருகிறது. இவற் றைத் தடுத்து நிறுத்த ஒரு தற்காப்பு யுத்தத் தைத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.



நான் உங்களிடம் கேட்டுக் கொள்வ தெல்லாம் ஒன்றுதான்... சொந்த மண்ணி லேயே நிம்மதி இழந்து, நிர்க்கதியாக நிற்க வேண்டிய கொடுமையான சூழலில் இருக்கும் எம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். எமது கனவு, இலட்சியம், வேட்கை எல்லாம் எம் மண்ணின் விடுதலை, மரண பயமற்று மக்கள் நடமாடும் தமிழ் ஈழம்!"

**நன்றி ஆனந்த விகடன்**

# நலம் தரும் நாயகி நயினை நாகபூசணி



அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகிறாள். சூரியனில் ஒளியாகவும், நீரில் தண்மையாகவும், நெருப்பில் வெப்பமாகவும் பூவில் மணமாகவும் விளங்கி நிற்கின்றாள் அவள். ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து - இவ்வுலகெங்கும் நிறைந்து நிற்கும் அன்னை ஐயம் அளந்தபடி இரு நாழி கொண்டு அகிலமெலாம் உய்ய அறம் வளர்த்திட பெருமையுடையவள். ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தென்னோண்டு கொட்டாவோ என்ற மணிவாசகரின் மணிவாக்கின்படி

அன்னை பராசக்தியும் பல்வேறு வடிவங் களையும் நாமங்களையும் பெற்றவளாகப் பரவசப்படுகின்றாள். அந்த மகா சக்தியின் மகத்துவ வடிவங்கள் பற்றியும் அவற்றின் பெருமைகள், சிறப்புகள், பேருண்மைகள் சாலச் சிறந்தது.

சக்தி வழிபாடே தாய் வழிபாடு, அன்னை வழிபாடு என்றெல்லாம் கூறப்படும். ஆதி சேடன் சக்தியின் சின்னம் என்பர். பொது வாகப் பாம்பு சக்தியின் சின்னமாகும். மிகப் பழங்காலத்தில் ஆதியில் நாக தேவதை வழிபாடே நிலவியது. நாகதேவதை சக்தியின் வடிவம். சக்தியின் சின்னமாகிய நாகதேவதை வழிபாட்டினடியாகவே இன்றும் நாகப் புற்றில் வழிபாடு செய்து வருகின்றனர். நாகதேவதை வழிபாட்டினடியாகவே நாக கன்னியர் வழிபாடும் தேன்றியது.

அன்னை சக்தி அணுமுதல் அண்டம் வரையுள்ள அனைத்திலும் நிறைந்திருக்கின்றாள். அவளது திருவிளையாடல்களில் பயனளிக்காத செயல் எதுவுமின்றி - சக்தியாண்டும் தோற்று வித்தருளும் செயல்களில் மேலான நோக்கம் உள்ளது. அங்ஙனமாயின் பூகம்பத்திலும் கொடுநோயிலும் அவள் கொண்டுள்ள நோக்கம் யாது என வினவலாம்.

அன்னை ஸ்ரீ நாக பூசணி அம்பிகையின் ஆலயத்தில் வருடம் தோறும் நடைபெறும் மஹோற்சவத்தை முன்னிட்டு அம்பிகையின் அருளாசிகளைப் பெறுவதற்காகப் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் வந்து கூடுவர்.

நயினை நாகபூசணி அம்மாளின் ஆலய கருவறையில் சுயம்புவாய் விளங்கும் நாகமும் அன்னையும் சிற்பவடிவிலே செதுக்கியோ, செப்புருவாய் வார்த் தெடுத்தே பிரதிஷ்டை செய்யப்படாது நயினை ஆலயத்தின் கருவறையிலே ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது.

நாக வழிபாட்டிலே தொடங்கி காலப்போக்கில் நாகபூசணி வழிபாடாக வளர்ந்து, அந்த வழிபாட்டின் ஆறாத் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாக பூசணி அம்பாள் ஆலயம் விளங்குகினறது.

இம்மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் -நாகம், நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும், இலங்கை எங்கணுமுள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழமை வய்ந்தது நயினை நாகபூசணி ஆலயமே என்பதும் ஐயமின்றிப் பெறப்படுகிறது. இத்தகு பெருமைகளை தன்னகத்தே கொண்ட நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இன்று மங்களகரமாக கொடியேற்றத் திருவிழா நடைபெறுகிறது.


**மதுரகவி**
**காரை எம்.பி. அருளானந்தன்**

## நாடும் வரம் தரும் நயினை நாகபூசணி


நயினைநகர் உறைபவளே நாகபூசணி
நாடும்வரம் தருபவளே நாகபூசணி
வினைகளையும் வித்தகியே நாகபூசணி
வேண்டும்வரம் அளிப்பவளே நாகபூசணி
உனைநம்பி வாழ்பவர்க்கு நாகபூசணி
உற்றதுணை இருப்பவளே நாகபூசணி
அலைகடலின் ஓரத்திலே நாகபூசணி
அற்புதமாய் கொடியேற்று நாகபூசணி

- அ.கலாநிதி -


# நமது ஈழநாடு நடத்திய போட்டிகளுக்கான பரிசளிப்பு



மறைந்த எழுத்தாளர் செம்பியன் செல்வனின் திருவுருவப் படத்துக்கு அவரது துணைவியார் மலர்மாலை அணிவிக்கிறார்.




எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சி.கதிர்காமநாதனுக்கு திருமதி ராஜகோபால் (செம்பியன் செல்வன்) பரிசு வழங்குகிறார்.




நமது ஈழநாடு மூன்றாம் ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற இ.ஜெயபாலுக்கு நிர்வாக இயக்குனர் சி.சிவமகாராசா பரிசு வழங்குகிறார்.







நமது ஈழநாடு மூன்றாம் ஆண்டு நிறைவு கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற எம்.பிருந்தா, இரண்டாம் பரிசு பெற்ற க.சுசீதரன், மூன்றாம் பரிசு பெற்ற த.பரமலிங்கம் ஆகியோருக்கு நமது ஈழநாடு நிர்வாக இயக்குனர் சி.சிவமகாராசா பரிசில்களை வழங்குவதைப் படங்களில் காணலாம்.



நமது ஈழநாடு மூன்றாம் ஆண்டு நிறைவு கட்டுரைப் போட்டியில் மூன்றாவது பரிசைப் பெற்ற வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி ரஜீவா யோகநாதன் பரிசைப் பெறுகிறார்.



நேற்றைய பரிசளிப்பு நிகழ்வில் சிறப்புரையாற்றுகிறார் எழுத்தாளர் ஐ.சாந்தன்.



நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்துகிறார் செல்வகுமார்.

## பாடசாலை மாணவர்களுக்கான நடமாடும் பற்சிகிச்சை முகாம்

நெல்லியடி —

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இயங்கும் பற்சிகிச்சை நிலையத்தினர் இன்று முதல் பாடசாலைகளில் நடமாடும் பற்சிகிச்சை முகாம் நடத்தவுள்ளனர்.

துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இந்த முகாம் நடைபெறவுள்ளது.

இந்தப் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் மாணவர்களை மேற்படி பாடசாலைகளுக்கு அனுப்பி சிகிச்சை முகாமில் சிகிச்சை பெறுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பாடசாலை அதிபர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் பற்சிகிச்சை முகாம் இந்த வாரம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது. (12)

## ஆக்க இலக்கிய படைப்புகளின் வளர்ச்சிக்கு செம்பியன்செல்வன் பெரும் பங்காற்றியவர்

### எழுத்தாளர் சாந்தன் புகழாரம்

யாழ்ப்பாணம் —

செம்பியன் செல்வனின் படைப்புக்கள் காலத்தால் சாகாதவை. அதனால் அவர் நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கக்கூடியதாக உள்ளது என்று எழுத்தாளர் சாந்தன் தெரிவித்தார்.

நமது ஈழநாடு அலுவலகத்தில் இடம்பெற்ற எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டி மற்றும் நமது ஈழநாடு 3 ஆம் ஆண்டு நிறைவு போட்டிகளில் பரிசுபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

செம்பியன் செல்வன் இந்துவில் படிக்கும் காலத்திலேயே எழுத்துப் பணியை ஆரம்பித்தார். பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருக்கும் போது பல படைப்புக்கள் நூலாக வெளிவருவதற்கும், பல்கலைக்கழக மாணவர்களிடையே கலை இலக்கியத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தவும் தூண்டுகோலாக இருந்தவர்.

முக்கியமாக அவர் ஆக்க இலக்கியத்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர். அவரின் சில படைப்புக்கள் ஈழ இலக்கியத்துறையில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தின. சிறுகதை, குறுங்கதை போன்ற பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஈழத்தமிழ் இலக்கியத்தில் செம்பியன் செல்வன் உச்சத்தை தொட்டவர். ஓய்வுபெற்ற பின்னர் இவரிடமிருந்து நாம் நிறையவே இலக்கியப் படைப்புக்களை எதிர்பார்த்திருந்தோம். ஓய்வு பெற்ற பின்னர் இவர் தனது வாழ்நாளை இலக்கியத்துக்காக அர்ப்பணிப்பார் என்று எதிர்பார்த்திருந்த வேளை துரதிஷ்டவசமாக அவரை இழந்து விட்டோம்.

செம்பியன் செல்வனின் இலக்கியப் படைப்புக்கள் காலத்தால் அழியாதவை. எனவே அவரது படைப்புக்கள் நிலைத்து நிற்கும் எனத் தெரிவித்தார்.

## 'நமது ஈழநாடு' நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசு வழங்கல்

யாழ்ப்பாணம் —

கனேடிய தமிழ் வானொலி, தமிழ் ஊடக நண்பர்கள் அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் நமது ஈழநாடு நடத்திய எழுத்தாளர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதை போட்டி மற்றும் நமது ஈழநாடு மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி ஆகியவற்றின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் நமது ஈழநாடு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக எழுத்தாளர் செம்பியன் செல்வனின் உருவப்படத்துக்கான மலர் மாலையை திருமதி இராஜகோபால் (செம்பியன் செல்வன்) ஏற்றி வைத்தார். நமது ஈழநாடு நிர்வாக இயக்குனர் சி.சிவமகாராசா உரை நிகழ்த்தினார்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை அவரது துணைவியார் திருமதி இராஜகோபால் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து நமது ஈழநாடு மூன்றாம் ஆண்டு நினைவையொட்டி நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை நமது ஈழநாடு நிர்வாக இயக்குனர் சி.சிவமகாராசா வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்வில் எழுத்தாளர் சாந்தன் சிறப்புரை நிகழ்த்தினார்.

## விசர் நோய் தடுப்பூசி

நெல்லியடி —

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வளர்ப்பு நாய்களுக்கான நீர் வெறுப்புநோய் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

இன்று காலை உடுப்பிட்டி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுமாறு சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (12)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஒரே நாளில் இரண்டு தடவைகள் துன்னாலையில் சுற்றிவளைப்பு!

நெல்லியடி

துன்னாலை கலிகைச் சந்தி இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள குடியிருப்புகள் நேற்றும் இரண்டு தடவை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் கலிகைச் சந்தி இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள அயல் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதன் பின்னர் மாலை 6 மணியளவில் இரண்டாவது தடவையாகவும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமாலை விடுதலைப் புலிகள் துன்னாலையில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துப்போவதாகத் தகவல் கிடைத்ததை அடுத்தே தாம் தேடுதல் நடத்துவதாக படையினர் அந்தப் பகுதி மக்களுக்கு தெரிவித்தனர்.

இதையடுத்து அந்தப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதுடன், கல்வி நிலையங்களிலிருந்தும் மாணவர்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரியவருகிறது. (12)

# நாயாறு கடல் நீரேரியில் புலிகளின் கடல் விமானம்

கொழும்பு

நாயாறு கடல் நீரேரியை புலிகள் கடல் விமானப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

வெலி ஓயாவிலுள்ள படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நாயாறு கடல் நீரேரியில் கடல் விமானத்தை தரையிறக்குவதையோ அல்லது மேற்கிளம்புவதையோ கண்காணித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பாக ஆராய்ந்து வருகிறது. விமானப் படையினர் இது குறித்து நடத்திய விசாரணையின்போது - புலிகளின் கடல் விமானமாக இருக்கலாமென சந்தேகம் எழுந்துள்ளது.

விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இது குறித்துத் தெரிவிக்கும் போது -

சந்தேகத்துக்குரிய கடல் விமானம் தொடர்பாக விமானப்படையிடம் எந்தவொரு சான்றும் கிடையாது என்று தெரிவித்தார்.

# குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

வேலணை

வேலணைப் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில்வேலணை துறையூர் ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவஞானம் (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவில் குளத்தில் குளிப்பதற்காகச் சென்றவரைக் காணாது தேடிய வேளை குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

# சுழிபுரத்தில் நேற்று கிரனேட் தாக்குதல் !

யாழ்ப்பாணம்

சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு அருகிலிருந்த இராணுவ காவலரண் மீது நேற்று மாலை இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று மாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக எந்தத் தகவலும் வெளிவரவில்லை.

இதேவேளை இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து வீதியால் சென்ற பொதுமக்கள் கடுமையாக தாக்கப்பட்டதுடன், அந்த வீதியால் சென்ற பயணிகள் பஸ் மறிக்கப்பட்டு கடுமையாகச் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (48)

# பொலிஸ் காவலரண்மீது மன்னாரில் தாக்குதல்!

மன்னார்

மன்னார் பொது விளையாட்டரங்குச் சந்தியிலுள்ள காவலரணில் கடமையிலிருந்த பொலிஸார் மீது நேற்றிரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

நேற்று இரவு 8.10 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இரவு 8.50 மணியளவில் அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் ஓட்டோ சாரதி ஒருவரும் படுகாயமடைந்தார்.

பொது விளையாட்டரங்கு சந்திப் பகுதியில் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து, படையினர் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தியது குறிப்பிடத்தக்கது. (மோ)

# புலிகள் நிராகரிப்பு...

சிங்கள சேவையான சந்தேசயவுக்கு அளித்த பேட்டியிலேயே புலித்தேவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சந்தேசயவுக்கு மேலும் கருத்து வெளியிடுகையில் -

நோர்வே அனுசரணையாளர்களை விலக்கிவிட்டு எம்முடன் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் பல தடவைகள் முயற்சிகளைச் செய்திருந்தது.

ஆனால், சர்வதேச சமூகத்தின் ஆதரவின்றி இலங்கை அரசுடன் எந்த இணக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

இரு தரப்புக்கும் இடையில் உத்தியோகபூர்வ தொடர்புகளை ஏற்படுத்துவதில் எமக்குள் ஈடுபாடு தொடர்பாக நாம் நோர்வே அரசுக்கு உறுதியாகத் தெரிவித்துள்ளோம்.

மகிந்த ராஜபக்ஷ நேரடித் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டாலும், நோர்வேயை அனுசரணையாளர்களாகத் தொடர்வதே எமது நோக்கம் என நோர்வேக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புளொட்...

தெரியாத நபர்களே கைத்துப்பாக்கியால் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

கொல்லப்பட்ட புளொட் உறுப்பினரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர் பொலிஸ் நிலையத்துக்கு மிக அருகிலும், 512 ஆவது படையணியின் தலைமையகச் சூழலுமான உயர்பாதுகாப்பு பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்று குறிப்பிடத்தக்கது.

சுட்டுக் கொல்லப்பட்ட சைமன் - முதலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தில் இருந்தவர் எனவும், பின்னர் புளொட் அமைப்பில் இணைந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# நீர்கொழும்பு கடற்பகுதியில் ட்ரோலர் படகு சிக்கியது!

கொழும்பு

நீர்கொழும்பு கடற்பிரதேசத்தில் அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்பட்ட சந்தேகத்துக்கிடமான ட்ரோலர் படகு ஒன்றைக் கைப்பற்றியிருப்பதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் படகுக்குச் சொந்தமான கோஸ்வர வர்த்தகர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு கடற்பரப்பில் நங்கூரமிட்டு நிறுத்தி நின்ற வேளையே ட்ரோலர் படகு நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டது.

அதனைச் சோதனையிட்ட போது, அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட வர்த்தகரிடம் இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதேவேளை - கைதுசெய்யப்பட்ட வர்த்தகரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒஸ்லோ...

எதிர்காலம் குறித்து தீர்மானம் எடுக்கப்படும். இது குறித்து கண்காணிப்புக் குழுப்பேச்சாளர் ஓமர்சன் தெரிவிக்கையில் - ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களை வெளியேறுமாறு விடுதலைப்புலிகள் அறிவித்த சூழலில் இதற்கு மூன்று தீர்வுகள் மட்டுமே இருக்கிறது.

கண்காணிப்புப் பணிகளை கொழும்புக்கும், கிளிநொச்சிக்கும் மட்டுப்படுத்தல். ஐஸ்லாந்திலிருந்தும் நோர்வேயிலிருந்தும்புதிய கண்காணிப்பாளர்களை நியமித்தல்,

கண்காணிப்புக் குழுவை வெளியேற்றுதல் ஆகியனவே அவையாகும். மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களுமே ஒஸ்லோ மாநாட்டில் ஆலோசிக்கப்படவுள்ளன. இதற்கான இறுதி முடிவை நோர்வே மேற்கொள்ளும் என்றும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# கண்காணிப்புக்குழு...

தொடர்ந்தும் வழங்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர்.

கண்காணிப்புக்குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் நீக்கப்படுவதற்கு ஆறுமாத கால அவகாசத்தை நோர்வே ஆரம்பத்தில் கோரியமை - முற்றுமுழுதாக நடுநிலையான அமைப்பாக கண்காணிப்புக்குழு இயங்கவேண்டுமென்ற புலிகளின் நிலைப்பாட்டுக்கு ஏற்புடையதல்ல.

இருந்தபோதும், கண்காணிப்புக் குழுவில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை கருத்தில் எடுத்து மறுசீரமைப்புக்கு வழங்கப்பட்ட ஒரு மாதகாலத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் நீடித்துள்ளனர்.

நோர்வேயால் எழுப்பப்பட்ட 5 கேள்விகளுக்கும் சாதகமாகப் பதிலளித்த இலங்கை அரசாங்கம் - தற்போது நாளாந்தம் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

கண்காணிப்புக்குழுவின் முன்னைய தலைமையில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு இலங்கை அரசாங்கம் முற்பட்டபோது, அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கவில்லை.

இவ்வாறான சூழலில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஆட்சேபிப்பதை ஏற்கமுடியாது.

மேலும், தமிழீழ தாயகக் கோட்பாட்டையும், தன்னாட்சி உரிமையின் அடிப்படையிலான தமிழ் மக்களின் இறையாண்மை உரிமைகளையும் இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கும்போது மட்டுமே - பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டு சமாதானத்துக்கு வழி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# நேரடியாகப்பேச...

இரகசிய ஒப்பந்தம் தொடர்பாக வினாவியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் நாளேட்டின் ஆசிரியர் என்.வித்தியாதரன் மற்றும் அதன் வெளியீட்டாளர் ஈ.சரவணபவன் ஆகியோரிடம் கடந்த செவ்வாய்க்கிழமை மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதன்படி, இராணுவமும், விடுதலைப் புலிகளும் போரை ஆரம்பிக்கும் நிலையில் உள்ளதால், இதை நிறுத்த ஒரு மாற்று உத்தியை தான் முன்னெடுக்க யோசித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரையும் கடந்த செவ்வாய்க்கிழமை தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்த மகிந்த, இதற்கான இணக்கப்பாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து கண்டறிந்து தனக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

போரொன்று ஆரம்பிக்கும் பட்சத்தில் இலங்கையின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிப்படையலாம் என்று குறிப்பிட்ட மகிந்த, இலங்கையின் அனைத்து சமூகங்களும் இதனால் பாதிப்படைய வாய்ப்புள்ளது என்று தெரிவித்ததுடன், நோர்வேயின் அனுசரணையில் தங்கியிருக்காது, அவர்களை விலக்கி விட்டு நேரடிப் பேச்சுக்களை முன்னெடுப்பது அவசியம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்தகைய நேரடிப் பேச்சுவார்த்தைகளில் காணப்படும் இணக்கப்பாட்டை அமுல்படுத்த இரு வாரங்களுக்கு முயற்சித்துப் பார்த்து அதில் வெற்றி காணும் பட்சத்தில் அந்த வெற்றியைத் தொடர்ந்து செயற்படுத்த இரு தரப்பும் முயலலாம் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

இந்த இருவார காலப்பகுதியில், விடுதலைப்புலிகள் மீதோ அல்லது பொதுமக்கள் மீதோ கருணா குழுவினர் எந்தத் தாக்குதல்களையும் தொடுக்காது இருக்க தான் பொறுப்பெடுக்க முடியும் என்று தெரிவித்த மகிந்த, இத்தகைய இருவார நேரடிப் போர்நிறுத்தத்துக்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் இந்தக் கோரிக்கையை உதயன் நாளேட்டைச் சேர்ந்த இருவரும் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் விளக்கியதாகவும், அதற்கான பதிலை விடுதலைப் புலிகள் பின்னர் தெரிவிப்பதாக அவர்களிடம் கூறி விட்டதாகவும் சண்டே லீடர் மேலும் தெரிவித்தது.

# புகுமுக மாணவர்கள்...

மாணவ-மாணவிகள் வற்புறுத்தப்படுகின்றனர். மதிய உணவும்கொண்டு வரச் சொல்லப்படுகிறது.

அவர்கள் வந்து சேர்ந்ததும் சிரேஷ்ட மாணவர் அல்லது மாணவி ஒருவரின் இல்லத்துக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

நல்லூர் கோவிலடியிலிருந்து அழைத்துச் சென்று சிரேஷ்ட மாணவர் அல்லது மாணவியின் வீட்டை அடைந்த பிறகே எந்த மாணவர் அல்லது மாணவியின் வீடு என்பது தெரியவரும். வீட்டு பெரியவர்கள் பகல் நேரத்தில் இல்லாத வீடுகளே 'ராகிங்' செய்வதற்கு பெரும்பாலும் தெரிவுசெய்யப்படுகிறது.

'ராகிங்' என்ற பெயரில் அங்கு -

புகுமுக மாணவிகளை சிரேஷ்ட மாணவர்கள் வாடி, போடி என்று கீழ்த்தரமாக அழைப்பது,

யாரையும் காதலிக்கிறாயா?, உடலுறவு கொண்ட அனுபவம் இருக்கிறதா? என்று கேட்பது -

மதிய உணவை எடுத்து சிரேஷ்ட மாணவர்கள் சாப்பிட்டு விட்டு மீதி உணவை சாப்பிடச் சொல்வது, மாணவர்களை இடுப்புப்பட்டியால் அடிப்பது, புகுமுக மாணவிகளை சிரேஷ்ட மாணவர்களிடம் ஐ லவ் யூ சொல்லும்படி வற்புறுத்துவது, மாணவிகளுக்கு பைல் மட்டையால் அடிப்பது,

புகுமுக மாணவிகளின் உள்ளாடைகளின் அளவை கேட்பது எனக் கொடூரமான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. ராகிங் செய்ய ஒத்துழைக்காவிட்டால் சிரேஷ்ட மாணவர்களின் நோட்ஸ் கிடைக்காது, நோட்ஸ் கிடைக்காவிட்டால் தேர்வில் சித்தியடைய முடியாது. சிரேஷ்ட மாணவர்களின் எந்தவித ஒத்துழைப்பும் கிடையாது. இப்படி மிரட்டல் விட்டே புகுமுக மாணவர்கள் ஒவ்வொரு நாளும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

'ராகிங்' இல் நடந்தவைகளை பெற்றோர், வீட்டில் உள்ளோரிடம் சொல்லக் கூடாது. நண்பர் வீட்டுக்குச் செல்கிறேன் என்று சொல்லித்தான் வர வேண்டும். ராகிங் போகிறேன் என்று சொல்லக்கூடாது. இப்படி மிரட்டி அனுப்பப்படுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிரேஷ்ட மாணவர் அல்லது மாணவியின் இல்லத்துக்குச் செல்ல வேண்டுமாம். ஒரே நாள் மட்டும் 'ராகிங்' என்று இல்லாமல் ஒவ்வொரு நாளும் செல்லவேண்டுமாம்.

குறிப்பிட்ட ஒரு பீடத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொள்வதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக எமக்கு கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து - நேற்றுக்காலை 8 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக சென்ற எமது செய்தியாளர்கள் அந்தச் சம்பவங்களை நேரில் பார்த்து உறுதி செய்ததும் குறிப்பிடத்தக்கது.

# மகிந்தவையும்...

முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார்.

இதற்கு முன்னோடியாக புலிகளும், அரசாங்கமும் இரண்டு வார காலத்துக்கு வன்முறைகளில் ஈடுபடுவதை தவிர்ப்பது எனவும், அதன் பின்னர் ஏற்படக்கூடிய நல்லெண்ண சூழலை அடிப்படையாகக் கொண்டு இரு தரப்பும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும் புதிய திட்டமொன்றை மகிந்த முன்வைத்திருந்தார்.

மேலும் இலங்கை படைகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தான் சிக்கியிருப்பதாகவும், இதிலிருந்து விடுபட்டு சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு விரும்புவதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

மகிந்தவின் இந்தக் கூற்றுக்கு விளக்கமளித்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் -ராஜபக்ஷவை ஆயுதப் படைகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாது. இவ்வாறான நிலையில் அவரது கூற்று நகைப்புக்கிடமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.